**பிரஸார் பாரதி**

**அகில இந்திய வானொலி, சென்னை-4**

**10 11 2025 MONDAY 7.15 pm**

**ஆகாஷவாணி**

***தலைப்புச் செய்திகள்***

1. **அங்கோலா நாடாளுமன்றத்தில் 39 சதவீத பெண் பிரதிநிதிகள் இருப்பது பாலின சமத்துவத்திற்கான சிறந்த உதாரணம் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.**

2. **நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் அரசின் கொள்கைகள் மற்றும் மக்கள் பிரச்சினைகள் குறித்து ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடத்தப்படும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கூறியுள்ளார்.**

3. **பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாக 122 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.**

4. **நாட்டின் வேலைவாய்ப்பின்மை விகிதம் நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் ஐந்து புள்ளி இரண்டு சதவீதமாக குறைந்துள்ளது.**

5. **ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா, ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.**

**- இனி விரிவான செய்திகள் ---**

**<<<<<<>>>>>>>**

அங்கோலா நாட்டின் சுதந்திர பொன்விழா கொண்டாட்டங்களில் தாம் பங்கேற்றிருப்பது இரு நாடுகளுக்கும் உத்வேகத்தை அளிப்பதாக உள்ளது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

அங்கோலா சென்றுள்ள அவர், Luanda–வில் உள்ள அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

இந்தியா – அங்கோலா இடையேயான நல்லுறவுகள் ஏற்பட்டு, 40 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்களை தாம் பாராட்டுவதாக அவர் கூறினார்.

அங்கோலா நாடாளுமன்றத்தில் 39 சதவீதம் பெண்கள் பிரதிநிதிகள் இருப்பது பாலின சமத்துவத்திற்கான உண்மையான உதாரணமாக திகழ்கிறது என்றும், ஆட்சி முறையில் பெண்களின் பங்களிப்பை அது வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதை குடியரசுத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் உரையாற்ற அழைப்பு விடுத்ததற்காக அந்நாட்டு அதிபர் திரு Joao Manuel Goncalves Lourenco-வுக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, Luanda–வில் உள்ள ஆயுதப்படையினரின் அருங்காட்சியகத்திற்கு குடியரசுத் தலைவர் சென்று பார்வையிட்டார்.

<<<<<<>>>>>>

இந்தியாவின் கடந்த பத்தாண்டுகால வளர்ச்சியில் தொழில்நுட்பம் முக்கிய பங்காற்றியிருப்பதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

உலக அறிவியல் தினத்தையொட்டி, அவர் அளித்த பேட்டியில், இந்தாண்டு நம்பிக்கை – மாற்றம் – எதிர்காலம் என்ற மையக்கருத்துடன் இந்த தினம் கொண்டாடப்படுவதாக தெரிவித்தார்.

இந்திய இளைஞர்களுக்கான பொற்காலமாக தற்போதைய இந்திய அறிவியல் யுகம் திகழ்வதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<<>>>>>>

நாட்டின் வடகிழக்கு மாநிலங்கள் அதன் வளமான கலாச்சாரம் , பன்முகத்தன்மை மற்றும் வலுவான ஜனநாயக மதிப்புகளுக்கு பிரபலமானவை என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா தெரிவித்துள்ளார்.

கொஹிமாவில் உள்ள நாகாலாந்து சட்டப்பேரவையில் காமன்வெல்த் நாடாளுமன்ற அமைப்பின் 22-ஆவது ஆண்டு மாநாட்டை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

வடகிழக்கு மாநிலங்கள் ஜனநாயக அடிப்படையிலும், தகவல் தொடர்பு மற்றும் கட்டமைப்பு வசதிகளிலும் விரைவான முன்னேற்றத்தை அடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பிராந்திய அளவிலான தேவைகளுக்கு ஏற்ற கொள்கைகளை வகுப்பதில் வடகிழக்கு மாநிலங்களின் சட்டப்பேரவைகளின் செயல்பாட்டிற்கு திரு ஓம். பிர்லா பாராட்டு தெரிவித்தார்.

நீடித்த வளர்ச்சியை எட்டுவதற்கு பொதுமக்களின் பங்களிப்புடன் கூட்டு பேச்சுவார்த்தை அவசியம் என்றும் திரு ஓம். பிர்லா குறிப்பிட்டார்.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல், 19-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் அரசின் கொள்கைகள் மற்றும் பொதுமக்கள் பிரச்சினைகள்

குறித்து ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடத்தப்படும் எடுத்துக்கொள்ளப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் மாண்பினை பராமரிக்க வேண்டியதன் அவசியத்தையும் திரு ஓம். பிர்லா அப்போது வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

நாட்டில் வேலைவாய்ப்பின்மை விகிதம் நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் ஐந்து புள்ளி இரண்டு சதவீதமாக குறைந்துள்ளது.

இந்த விகிதம் முதல் காலாண்டில் ஐந்து புள்ளி நான்கு சதவீதமாக இருந்தது என மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவல் தெரிவிக்கிறது.

கிராமப்புற பகுதிகளில் ஒட்டுமொத்த வேலைவாய்ப்பின்மை விகிதம் நான்கு புள்ளி நான்கு சதவீதமாகவும், நகர்ப்புறங்களில் ஆறு புள்ளி ஒன்பது சதவீதமாகவும் உள்ளது என அந்த தகவல் தெரிவிக்கிறது.

இதே காலக்கட்டத்தில், மகளிரின் பங்களிப்பு 33 புள்ளி ஏழு சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாக 122 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதையொட்டி, அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

243 தொகுதிகளை கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு முதல்கட்டமாக கடந்த 6-ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் சுமார் 65 சதவீத வாக்குகள் பதிவாகின.

இரண்டு கட்ட தேர்தலிலும் பதிவாகும் வாக்குகள் வரும் 14-ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

இதனிடையே, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு ரவிசங்கர் பிரசாத், பீகார் தேர்தலில் பிஜேபி கூட்டணி வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் இப்போதே தங்களின் தோல்வியை ஒப்புக்கொண்டதாகவும் அவர் குறை கூறினார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு தேஜஸ்வி யாதவ், கடந்த 20 ஆண்டுகளில் பீகார் எந்த வளர்ச்சியையும் எட்டவில்லை என்று கூறினார்.

இந்த தேர்தலில் தங்கள் கூட்டணி வெற்றிபெறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

கேரளாவில் உள்ளாட்சித் தேர்தல் அடுத்த மாதம் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய, அம்மாநில தேர்தல் ஆணையர் திரு ஷாஜகான், டிசம்பர் ஒன்பது மற்றும் 11-ஆம் தேதிகளில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டு, வாக்கு எண்ணிக்கை 13-ஆம் தேதி நடைபெறும் என்று தெரிவித்தார்.

உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து, மாநிலத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மொத்தம் உள்ள ஆயிரத்து 200 உள்ளாட்சி பதவியிடங்களில் கன்னூர் மாவட்டம் Mattannur நகராட்சி தவிர, மற்ற அனைத்து இடங்களுக்கும் தேர்தல் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

டிசம்பர் மூன்றாவது வாரத்தில் தேர்தல் நடைமுறைகள் முடிவுக்கு வரும் வரை நடத்தை விதிமுறைகள் கண்டிப்பாக பின்பற்றப்படும் என்றும் திரு ஷாஜகான் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>>

இந்தியா – இலங்கை இடையேயான 11-ஆவது ஆண்டு கூட்டு ராணுவ பயிற்சி ”மித்ரா சக்தி” என்ற பெயரில் கர்நாடக மாநிலம் பெலகாவி பயிற்சி மையத்தில் இன்று தொடங்கியுள்ளது.

வரும் 23-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த ராணுவ பயிற்சியில், இந்தியா சார்பில், ராஜ்புத் படைப்பிரிவை சேர்ந்த 170 வீரர்களும், இலங்கை தரப்பில் Gajaba படைப்பிரிவிலிருந்து 135 வீரர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

மேலும், இந்திய விமானப்படையின் 20 வீரர்களும், இலங்கை விமானப்படையின் பத்து வீரர்களும் இந்த பயிற்சியில் பங்கேற்றுள்ளனர்.

தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை இரு நாடுகளின் ராணுவத்தினரும் கூட்டாக எதிர்கொள்வது, உள்ளிட்ட பயிற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

<<<<<<>>>>>>

இந்தியா – வியட்நாம் இடையே நீர்மூழ்கி கப்பல் தேடுதல் மற்றும் மீட்புக்கான ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

வியட்நாம் சென்றுள்ள பாதுகாப்புத்துறை செயலாளர் திரு ராஜேஷ்குமார் சிங், Hanoi-யில் நடைபெற்ற 15-ஆவது இந்தியா – வியட்நாம் பாதுகாப்பு கொள்கை பேச்சுவார்த்தைக்கு

அந்நாட்டு அமைச்சர் Hoang Zuan-வுடன் கூட்டாக தலைமை தாங்கினார்.

பின்னர் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இருநாடுகளும் பாதுகாப்பு தளவாட ஒத்துழைப்பில் நல்லுறவுகளை வலுப்படுத்துவதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தியாவும் , வியட்நாமும் ஒருங்கிணைந்த பங்களிப்பை தொடர்ந்து மேற்கொள்வது என உறுதி ஏற்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

டாக்காவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் இந்தியா ஆடவர் பிரிவில் கஜகஸ்தானையும், மகளிர் பிரிவில் பங்களாதேஷையும் வென்றது.

-----------

உலக துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், மகளிர் குழு பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

-------------

உலகக்கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜோதி சிங் தலைமையிலான இந்த அணியில் 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி, சிலியின் சாண்டியாகோவில் வரும் 25-ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 13-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

----------------

உலக Boccia போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஆஸ்திரேலியாவின் கான்பராவில் நடைபெற்ற இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Ajeya Raj – Anjali Devi இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

<<<<<<END>>>>>>>